பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
10 09 2025 7.15
புதன்கிழமை இரவு

ஆகாஷவாணி செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) பீகார், ஜார்க்கண்ட் மற்றும் மேற்கு வங்க மாநிலங்களை இணைக்கும் Bhagalpur – Dumka – Rampurhat ரயில் வழித்தடத்தை இரட்டை பாதையாக மாற்றும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2) நேபாளத்திற்கு பயணம் மேற்கொள்வதை இந்தியர்கள் தவிர்க்குமாறு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

3) தமிழகத்தில் வேளாண் விளைபொருட்களுக்கு மதிப்பு கூட்டு மையங்கள் அமைத்திட அதிகபட்சமாக 1 கோடியே 50 லட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படவுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

4) பிரான்சில் அந்நாட்டு அதிபர் திரு இமானுவேல் மேக்ரானுக்கு எதிரான போராட்டம் தீவிரம் அடைந்துள்ளது.

5) உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Nupur அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-இனி விரிவான செய்திகள்-

பீகார், ஜார்க்கண்ட் மற்றும் மேற்கு வங்க மாநிலங்களை இணைக்கும் Bhagalpur – Dumka – Rampurhat ரயில் வழித்தடத்தை இரட்டை பாதையாக மாற்றும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், 3 ஆயிரத்து 169 கோடி ரூபாய் மதிப்பில் இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக கூறினார்,

*177 கிலோமீட்டர் தொலைவிலான இந்த ரயில் பாதை சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு உட்பட்ட ஐந்து மாவட்டங்களை இணைப்பதாக அவர் கூறினார்.*

*பீகார் மாநிலத்தில் Buxar-Bhagalpur இடையே அதிவிரைவு 4 வழி பசுமை சாலை அமைக்கும் திட்டத்திற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்*

*4 ஆயிரத்து 447 கோடி ரூபாய் செலவில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாகவும் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.*

*இதற்கிடையே, நாடுமுழுவதும் ரயில் கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி உறுதியுடன் கூறியுள்ளார்.*

*சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதன் அடிப்படையில்தான் இன்று மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ரயில் மற்றும் சாலை மேம்பாட்டு திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*இதன்காரணமாக மேற்கு வங்கம், பீகார், ஜார்க்கண்ட் மாநில மக்கள் பயனடைவார் என்றும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*இதற்கிடையே, மத்திய அமைச்சரவையின் இந்த முடிவுகள் வரவேற்கத்தக்கது என்று தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.*

*சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இரட்டை ரயில் பாதை அமைக்கும் திட்டத்தின் மூலம் ஜார்க்கண்ட், மேற்கு வங்கம் மற்றும் பீகார் மாநிலங்களுக்கு உட்பட்ட 441 கிராமங்கள் பயனடையும் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*பீகாரில் சாலை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்திருப்பது கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு வகை செய்யும் என்றும் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.*

*>><><><><<*

*நேபாளத்திற்கு பயணம் மேற்கொள்வதை இந்தியர்கள் தவிர்க்குமாறு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.*

நேபாளத்தில் தற்போது நிலவி வரும் சூழலை கருத்தில் கொண்டு வெளியுறவு அமைச்சகம் இந்த அறிவுறுத்தலை மேற்கொண்டுள்ளது.

நேபாளத்தில் வசிக்கும் இந்தியர்கள் பொதுஇடங்களுக்கு செல்வதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

உதவி தேவைப்படுவோர் இந்திய தூதரக அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

980 860 2881, மற்றும் 981 032 6134 என்ற தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்திய தூதரகத்தின் மின்னஞ்சல் முகவரியையும் உதவி தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளலாம் என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

>><><><><<

ஓய்வூதியம் தொடர்பான புகார்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய பணியாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் ஓய்வூதியதாரர் குறைதீர் முகாமை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

குறிப்பாக மாற்றுத்திறனாளி ஓய்வூதியதாரர்களின் புகார்களுக்கு தீர்வு காண கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

புகார் தொடர்பான ஆவணங்களை சரிபார்த்தல் பணிகளில் தொழில்நுட்பத்தினை பயன்படுத்த வேண்டும் என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் கேட்டுக்கொண்டார்.

>><><><><<

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் விவசாயிகளின் வருவாயை இரண்டு மடங்காக அதிகரிக்க உதவிடும் என்று மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சவுத்திரி கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்த அவர், வேளாண் இயந்திரங்கள் மீதான வரி குறைக்கப்பட்டு இருப்பதை சுட்டிக்காட்டினார்.

இந்த சீர்திருத்த நடவடிக்கைகள் வரலாற்றுச் சிறப்புமிக்கது என்றும் அவர் கூறினார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இது மேலும் உத்வேகம் அளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்கும் புதிய வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும் இந்த வரி சீர்திருத்த நடவடிக்கைகள் உதவிகரமாக இருக்கும் என்றும் திரு பங்கஜ் சவுத்திரி கூறினார்.

>><><><><<

பஞ்சாப் மாநிலத்தின் வெள்ள நிவாரணப் பணிகளுக்கு கூடுதல் நிதியுதவியை மத்திய அரசு வழங்கும் என்று ஆளுநர் திரு குலாப் சந்த் கட்டாரியா கூறியுள்ளார்.

மொஹாலியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்கான உறுதிமொழியை பிரதமர் வழங்கியுள்ளதாக கூறினார்.

இயற்கை பேரிடரால் பாதிக்கப்படும் மாநிலங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கான நெறிமுறைகள் உள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் அடிப்படையில் மத்திய அரசு செயல்படும் என்றும் திரு குலாப் சந்த் கட்டாரியா கூறினார்.

>><><><><<

உத்ராகண்டில் மழை வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்த மத்தியக் குழுவினர் அம்மாநில முதலமைச்சர் திரு *Pushkar Singh Dhami* -ஐ இன்று சந்தித்து ஆலோசனை மேற்கொண்டனர்.

டேராடூனில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில், மழை வெள்ள பாதிப்பு குறித்தும், எதிர்காலத்தில் பாதிப்புகளை குறைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

>><><><><<

*பீகாரில் சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஆயிரத்து 264 கோடி ரூபாயை அம்மாநில முதலமைச்சர் திரு நிதிஷ்குமார் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு இன்று விடுவித்தார்.*

*இதன்மூலம் 1 கோடியே 13 லட்சம் பேர் பயனடைந்திருப்பதாக அம்மாநில அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.*

*இந்த திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ஆயிரத்து 100 ரூபாய் பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது.*

*400 ரூபாயாக இருந்த ஓய்வூதியத் தொகையை திரு நிதிஷ் குமார் ஆயிரத்து 100 ரூபாயாக உயர்த்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>><><><><<*

*தமிழகத்தில் வேளாண் விளைபொருட்களுக்கு மதிப்பு கூட்டு மையங்கள் அமைத்திட அதிகபட்சமாக 1 கோடியே 50 லட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படவுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.*

*இதுதொடர்பாக வேளாண் துறை அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில், 100 மதிப்பு கூட்டு மையங்கள் அமைக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.*

*இந்த வாய்ப்பினை வேளாண் தொழில் முனைவோர் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*>><><><><<*

*மும்பை உயர்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதிகளான திரு Sanjay Anandrao Deshmukh, திருமதி Vrushali Vijay Joshi, திரு Abhay Jainarayanji Mantri, திரு Shyam Chhaganlal Chandak, திரு Neeraj Pradeep Dhote மற்றும் திரு சோமசேகர் சுந்தரேசன் நீதிபதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.*

*இதற்கான அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.*

>><><><><<

பிரான்சில் அந்நாட்டு அதிபர் திரு இமானுவேல் மேக்ரானுக்கு எதிரான போராட்டம் தீவிரம் அடைந்துள்ளது.

அந்நாட்டு பிரதமராக திரு *Sebastien Lecornu*-வை நியமித்ததை கண்டித்து இந்த போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

முதற்கட்டமாக போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 200 பேர் கைது செய்யப்பட்டதாகவும், இதனைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கானோர் போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தடைகளை மீறி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாகவும் அந்த தகவல்கள் கூறுகின்றன.

>><><><><<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் *Nupur* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்தின் லிவர் பூலில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 80 எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் உஸ்பெகிஸ்தானின் *Oltinoy Sotimboeva*-ஐ வென்றார்.

---------------

ஹாங்காங் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரணாய் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-17, 21-14 என்ற செட்கணக்கில் சீனாவின் *Lu Guang Zu* -ஐ வென்றார்.

லக்ஷ்யா சென் மற்றும் கிரண் ஜார்ஜூம் முதல் சுற்று ஆட்டங்களில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

---------------

*உலக சீனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Swati Sharma காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

-------------------

*வியட்நாம் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Ashmita Chaliha, Tanvi Sharma, Shriyanshi Valishetty ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.*

---------------

*டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப்பட்டியலில் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் அபிஷேக் ஷர்மா முதலிடத்தில் நீடிக்கிறார்.*

*திலக் வர்மா இரண்டாவது இடத்திலும், சூர்யகுமார் யாதவ் 6 ஆவது இடத்திலும் உள்ளனர்.*

*பந்து வீச்சு பிரிவில் Ravi Bishnoi 3-ஆவது இடத்திற்கும் Arshdeep Singh 10-ஆவது இடத்திற்கும் முன்னேறியுள்ளனர்.*

*>> End of News <<*